ஓம்.



தமிழ் இலக்கண

# வினைவிருக்ஷ விபரம்.

# வினைச்சொல் விபரம்.

இவை

சிதம்பரம் பச்சையப்பன் ஹைஸ்கூல்

தமிழ்ப் பண்டிதர்

S. சிவப்பிரகாசம் [illegible]ால்,

இயற்றப்பெற்றன.

கார்த்திகேயன் பிரஸ்,

சிதம்பரம்.

1922

ஸ்ரீ

கணபதி துணை.

## வினைவிருக்ஷ விபரம்.

1 வினைச்சொல்லாகிய விருக்ஷம், குறிப்பு வினையென்றும், தெரிநிலை வினையென்றும் இரண்டு கிளை கிளைத்தது.

2 அவ்விரண்டில் குறிப்புவினையானது, உடன்பாடென்றும், எதிர்மறையென்றும், இரண்டு கிளை கிளைத்தது.

3 அந்த உடன்பாடானது வினையெச்சம், பெயரெச்சம், முற்று என மூன்று கிளை கிளைத்தது. அம்மூன்றில் வினையெச்சமும் பெயரெச்சமும் கிளைக்காமல் நின்றுவிட, முற்று மாத்திரம் தன்மை, முன்னிலை, படர்க்கையென மூன்று கிளை கிளைத்தது. அம்மூன்றில் தன்மை யென்பது ஒருமை யென்றும், பன்மையென்றும் இரண்டுகிளையாக தழைத்து நின்றது. அதுபோலவே முன்னிலையென்பதும் ஒருமை பன்மையென்று இரண்டுகிளையாயத்தழைத்து நின்றது. படர்க்கை யென்பதுமாத்திரம் ஒருமை, பன்மையென இரண்டுகிளையாய்க்கிளைத்து, ஒருமையென்பதில் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என மூன்று கிளை தழைத்தும், பன்மையென்பதில் பலர்பால், பலவின்பால் என இரண்டு கிளை தழைத்தும் நின்றது.

4 இந்த குறிப்புவினையிலுள்ள உடன் பாட்டைப் போலவே குறிப்புவினை எதிர்மறையும் கிளைத்தும் தழைத்தும் நின்றது.

5 இனி, தெரிநிலை வினையானது, எதிர்மறையென்றும் உடன்பாடென்றும் இரண்டுகிளை கிளைத்தது. இவ்விரண்டில் எதிர்மறையானது, குறிப்புவினையிலுள்ள உடன்பாட்டைப் போலவும், குறிப்புவினையிலுள்ள எதிர்மறையைப் போலவும், கிளைத்தும் தழைத்தும் நின்றது. தெரிநிலைவினையிலுள்ள உடன்பாடு மாத்திரம், தெரிநிலை வினையிலுள்ள எதிர்மறையைப் போலவும், குறிப்பு வினையிலுள்ள உடன் பாட்டைப்போலவும், எதிர்மறையைப் போலவும் கிளைத்து, பின் அவற்றிலுள்ள ஒவ்வொருதழையும் ஒவ்வொரு கிளையாய், ஒவ்வொருகிளையும். இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று மூன்று வகையாய்ப் பூத்து நின்றது.

## பீடிகை

பெயர்ச்சொல்லுக்கு வேற்றுமையுண்டு காலமில்லை. வினைச்சொல்லுக்கு காலமுண்டு வேற்றுமையில்லை. பெயர்ச்சொல் வினைச்சொல்லுக்குரிய காலத்தைப் பெற்றுவந்தால், அந்த பெயர்ச்சொல் வினைச்சொல்லாய், குறிப்புவினை யெனப்பெயர்பெறும். வினைச்சொல் பெயர்ச் சொல்லுக்குரிய வேற்றுமையைப் பெற்றுவந்தால், அந்த வினைச்சொல் பெயர்ச்சொல்லாய் வினையாலணையும்பெயர் எனப் பெயர்பெறும்.

## குறிப்புவினையும்,
## பெயர்ச்சொல் காலமேற்கும் விதமும்.

ஒருவனை நல்லன் என்று சொல்லும்போது, அது அவனுக்கு வழங்குதற்கிட்ட பெயராயில்லாமல், நல்லவனாயிருந்தான், நல்லவனாயிருக்கிறான், நல்லவனாயிருப்பான் என மூன்று காலத்தையுமேற்கும். இப்படி ஒரு பெயர்ச்சொல் மூன்று காலத்தையும் காட்டும்போது குறிப்பு வினையாம். குறிப்பு வினைச்சொல், ஒருவனுக்கு வழங்குதற்கிட்ட பெயராயிராது. அந்தகுறிப்பு வினைச்சொல் பொருளால்வரும் பெயர், இடத்தால்வரும் பெயர், காலத்தால் வரும்பெயர், சினையால் வரும்பெயர், குணத்தால் வரும்பெயர், தொழிலால் வரும்பெயர் என ஆறுவகைப்படும்.

---

### ஆறுவகையும் வருமாறு.

1. பொருளால் வருவது:—ஒருவனை யானையான் என்னும்போது, அது அவனைவழங்குதற்கிட்ட பெயராயில்லாமல். முன்புயானையையுடையவனாயிருந்தான், இப்போது யானையையுடையவனாயிருக்கிறான் இனி யானையையுடையவனாயிருப்பான் எனவரும். இந்த பொருளால் வரும்பெயர், முன்பு யானையான் என்னும்போது இறந்தகாலத்தையும், இப்பொழுது யானையான் என்னும்போது நிகழ்காலத்தையும், இனியானையான் என்னும்போது எதிர்காலத்தையும் காட்டும். ஆதலால், இது பொருளால் வருங்குறிப்புவினையாம்.

2 இடத்தால் வருவது:—ஒருவனை சிதம்பரத்தான் என்றபோது அது அவனைவழங்குதற்கிட்ட பெயராயில்லாமல் முன்பு சிதம்பரத்திலிருந்தான், இப் பொழுது சிதம்பரத்திலிருக்கிறான், இனி சிதம்பரத்தில்லிருப்பான், எனவரும். இந்த இடத்தால் வரும்பெயர்,முன்பு சிதம்பரத்தான் என்னும் பொது இறந்த காலத்தையும், இப்பொழுது சிதம்பரத்தான் என்னும்போது நிகழ்காலத்தையும், இனி சிதம்பரத்தான் என்னும் போது எதிர்காலத்தையும் காட்டும். ஆதலால் இது இடத்தால்வரும் குறிப்பு வினையாம்.

3 காலத்தால் வருவது:—ஒருவனைத்தையான் என்றபோது, அது அவனைவழங்குதற்கிட்ட பெயராயில்லாமல், முன்பு தைமாதத்திற்பிறந்தான், இப்பொழுது தைமாதத்திற் பிறக்கிறான், இனித் தைமாதத்திற்பிறப்பான் என வரும். இந்தகாலத்தால் வரும்பெயர் முன்பு தையான் என்னும் போது இறந்தகாலத்தையும், இப்பொழுது தையான் என்னும் போது நிகழ்காலத்தையும், இனித்தையான் என்னும் போது எதிர்காலத்தையும் காட்டும். ஆதலால் இது காலத்தால்வரும் குறிப்புவினையாம்.

4 சினையால்வருவது:—சினையென்பது உறுப்பு. ஒருவனை முழியன் என்னும்போது, அது அவனை வழங்குதற்கிட்ட பெயராயில்லாமல் முன்பு முழியை உடையவனாயிருந்தான், இப்பொழுது முழியையுடையவனாயிருக்கிறான், இனி முழியையுடையவனாயிருப்பான் எனவரும் இந்தசினையால் வரும் பெயர் முன்பு முழியன் என்னும்போது இறந்தகாலத்

தையும் இப்பொழுது மழியன் என்னும்போது நிகழ்காலத்தையும், இனி மழியன் என்னும்போது எதிர்காலத்தையுங்காட்டும். ஆதலால் இது சினையால் வருங் குறிப்புவினையாம்.

5 குணத்தால் வருவது:—ஒருவனை நல்லன் என்றபோது அது அவனை வழங்குதற்கிட்டபெயரா யில்லாமல் முன்பு நல்லவனாயிருந்தான், இப்பொழுது நல்லவனாயிருக்கிறான், இனி நல்லவனாயிருப்பான் என வரும். இந்த குணத்தால்வரும் பெயர், முன்பு நல்லன் என்னும்போது இறந்தகாலத்தையும், இப்பொழுது நல்லன் என்னும் போது நிகழ்காலத்தையும், இனி நல்லன் என்னும்போது எதிர்காலத்தையுங் காட்டும். ஆதலால் இது குணத்தால் வருங் குறிப்பு வினையாம்.

தொழிலால் வரும்பெயர்:—ஒருவனை ஓதுவான் என்றபோது அது அவனை வழங்குதற்கிட்ட பெய ராயில்லாமல் முன்பு ஓதினவனாயிருந்தான், இப்பொழுது ஓதுகிறவனாயிருக்கிறான், இனி ஓதுபவனாயிருப் பான் என வரும். இந்தத்தொழிலால்வரும் பெயர், முன்பு ஓதுவான் என்னும் போது இறந்தகாலத்தை யும், இப்பொழுது ஓதுவான் என்னும்போது நிகழ் காலத்தையும், இனி ஓதுவான் என்னும்போது எதிர் காலத்தையுங்காட்டும். ஆதலால் இது தொழிலால் வருங் குறிப்புவினையாம்.

முன்பு, இப்பொழுது, இனி யெனச்சேர்க்காமல் யானையான்,சிதம்பரத்தான், தையான், முழியன், நல்லன், ஓதுவான் என்றபோதே மூன்றுகாலங்களையுங் காட்டும் என்பது விரிவாகச்சொல்லப்பட்டது.

## தெரிநிலைவினை.

**தெரிநிலை வினை:**—வந்தான் என்றபோது இறந்தகாலமென்றும், வருகிறான் என்றபோது நிகழ்காலமென்றும், வருவான் என்றபோது எதிர்காலமென்றும் இயல்பாக யாவரும் எளிதில் மூன்றுகாலங்களையுந் தெரிந்துகொள்ளும்படி வருகிறவினைச்சொற்களாம்.

## உடன்பாடு.

மேலேகூறிய அறுவகைக்குறிப்பு வினைகளும் மேலேகூறிய தெரிநிலை வினைகளுமே உடன்பாடாம். அல், இல், ஆ என்பனவற்றை முதலிலேனும் நடுவிலேனும் பெறுமல்வருவதாம். உதாரணம் சிதம்பரத்தான் என்பது முதலியன உடன்பாட்டுக் குறிப்பு வினை வந்தான் முதலியன உடன்பாட்டுத் தெரிநிலை வினை.

## எதிர்மறை

அல், இல் என்கிற இரண்டில் ஏதாவதொன்றை முதலில் பெற்றுவரும்வினைச்சொற்களும், இல், அல், ஆ என்கிறமூன்றில் ஏதாவதொன்றை நடுவில்

பெற்றுவரும் வினைச்சொற்களும் எதிர்மறையாம். அல், இல் முதலில் வரும்போது எதிர்மறைக் குறிப்பு வினையாம். இல், அல், ஆ என்பன நடுவில் வரும்போது எதிர்மறைத்தெரிநிலை வினையாம். முற்று, பெயரெச்சம் வினையெச்சங்களுக்கும் இவ் வாறேகொள்க. உதாரணம் அல்லன் இல்லன் என் பன எதிர்மறைக் குறிப்புவினை, வந்திலன், உண்ணா லன், வரான் என்பன எதிர்மறைத் தெரிநிலைவினை.

## பெயரெச்சம்.

பெயரெச்சம்:—ஒருவினைச்சொல் பால்காட்டும் விகுதிபெறாமல் பெயர்ச்சொல்லைக்கொண்டு முடிவது. அது வருமாறு:—பால்காட்டும் விகுதிகளான ஆன் முதலாகிய ஆண்பால் விகுதிகளையும், ஆள் முதலாகிய பெண்பால் விகுதிகளையும், ஆர் முதலாகிய பலர்பால் விகுதிகளையும், து. முதலாகிய ஒன்றன்பால் விகுதி களையும், அ. முதலாகிய பலவின்பால் விகுதிகளையும். என் முதலாகியதன்மை ஒருமை விகுதிகளையும், ஓம் முதலாகியதன்மைப் பன்மை விகுதிகளையும், ஆய் முதலாகிய முன்னிலை ஒருமை விகுதிகளையும், ஈர், முதலாகிய முன்னிலைப்பன்மை விகுதிகளையும், தெரிநிலை வினைச்சொற்களும் குறிப்பு வினைச்சொற் களும் பெற்றுவராமல், தெரிநிலை வினைச்சொற்கள் அ. உம். என்கிற இரண்டுவிகுதிகளில் ஏதாவதொரு விகுதியைத்தன்பின்னே ஏதாவதொரு பெயர்ச் சொல் வருவதற்குப் பொருத்தமாய்ப் பெற்று அப் பெயர்ச்சொல்லில்லாமல், செய்த, செய்கின்ற, செய்

யும், செய்யாத என்னும் வாய்பாடுகளைப்போல வருவதும், குறிப்பு வினைச்சொற்கள், அ· விகுதியைத் தன்பின்னே ஏதாவதொரு பெயர்ச்சொல் வருவதற்குப் பொருத்தமாய்ப் பெற்று பெரிய, நல்ல என்னும் வாய்பாடுகளைப் போலவும், அல்லாத, இல்லாத, எனவும் வருஞ்சொற்களாம்.

இவற்றுள் செய்தஎன்பது இறந்தகாலம்
செய்கின்ற என்பது நிகழ்காலம்
செய்யும் என்பது எதிர்காலம்
இம் மூன்றும் உடன்பாட்டுத் தெரிநிலைவினை
செய்யாத என்பது எதிர்மறைத் தெரிநிலைவினை
பெரிய என்பது உடன்பாட்டுக் குறிப்பு
அல்லாத இல்லாத என்பன எதிர்மறைக் குறிப்பு.

## வினையெச்சம்

பால்காட்டும் விகுதியில்லாமல் ஒருவினைச்சொல் வேறொரு வினைச்சொல்லோடு சேர்ந்துவருவது. ஒரு வினைச்சொல் பெயரெச்சத்திற் சொல்லியபடி பால் காட்டும் ஒன்பது விகுதிகளையும்பெறாமல் உ. இ. ய். என்கிற மூன்றில் எதாவதொரு விகுதியைத்தன் பின்னால் ஓர் வினைச்சொல் வரும்படி பொருத்தமாய்ப் பெற்றுத் தன் பின்வரும் அந்த வினைச்சொல் ஏல்லாமல், செய்து, சொல்லி, போய், என்னும் வாய்பாடுகளைப் போலவருஞ் சொற்களும், அ· என்

கிற விகுதியைத் தன்பின்னுல் ஓர் வினைச்சொல் வரும்படி பொருத்தமாய்ப்பெற்று, தன்பின் வரும் அந்த வினைச்சொல்லில்லாமல், செய, வென்னும் வாய்பாட்டைப்போல வரும் வினைச்சொற்களும், இன், ஆல், கால் என்பன போன்ற விகுதிகளில் ஏதாவதொன்றைத் தன்பின்னுல்வரும் ஓர் வினைச்சொல்லுக்குப் பொருத்தமாய்ப் பெற்று, தன்பின்வரும் அந்த வினைச்சொல்லில்லாமல், செய்யின் செய்தால், செய்தக்கால் என்னும் வாய்பாட்டைப்போல வரும் வினைச்சொற்களும், ஆ. த். என்பதனேடு சேர்ந்த உ. அதாவது, ஆது என்பதை யாவது, ஆ. என்பதனேடு சேர்ந்த மல், அதாவது ஆமல்என்பதையாவது, ஆ என்பதனேடு சேர்ந்த, மே. அ தா வ து ஆமே என்பதையாவது, தன் பின்னுல்வரும் ஒ ரு வினைச்சொல்லுக்குப் பொருத்தமாய்ப் பெற்றுத் தன்பின் வரும் அந்த வினைச்சொல்லில்லாமல் செய்யாது, செய்யாமல், செய்யாமே என்னும் வாய்பாட்டைப்போல வரும் வினைச்சொற்களும், மெல்ல, பைய, வலிய, என்பன போன்ற சொல்லும், அன்றி, இன்றி, அல்லாது, அல்லாமல், அல்லாமே, இல்லாது, இல்லாமல், இல்லாமே என்கிற சொற்களும் வினையெச்சங்களாம்.

(1) செய்து, சொல்லி, போய் என்பன இறந்தகால உடன்பாட்டுத் தெரிநிலை வினையெச்சம்.

(2) செய, என்பது முக்காலத்துக்கும் பொதுவாய் வருகிற உடன்பாட்டுத் தெரிநிலை வினையெச்சம்.

(3) செய்யின், செய்தால், செய்தக்கால் என்பன எதிர்கால உடன்பாட்டுத் தெரிநிலை வினையெச்சம்.

(4) செய்யாது, செய்யாமல், செய்யாமே என்பன எதிர்மறைத் தெரிநிலை வினையெச்சம்.

(5) மெல்ல, பைய, வலிய முதலியன உடன்பாட்டுக் குறிப்பு வினையெச்சம்.

(6) அன்றி, இன்றி, அல்லாது, அல்லாமல், அல்லாமே, இல்லாது, இல்லாமல், இல்லாமே, எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம்.

இவற்றுள் செய என்பது நிகழ்காலத்தை மாத்திரம் குறிக்காமல் முக்காலத்துக்கும் பொதுவாய் வருமாதலால் முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சம் எனப் பெயர் பெற்றது.

## உதாரணம்.

சம்பளம் கட்டப்போய் கட்டாமல்வந்த ஒரு பையனை எங்கே போனாய் என்றபோது அவன் சம்பளம் கட்டப்போனேன் என்றால், கட்ட என்றது இனி சம்பளம் கட்டவேண்டிய காரியத்துக்காக எனப் பொருள்படுதலால் அது எதிர்காலத்தைக் குறிக்கும்.

சம்பளம் கட்டிவிட்டு வந்த பையனை எங்கே போனாய் என்றபோது அவனும் சம்பளம் கட்டப்

போனேனென்றால் கட்ட என்றது சம்பளம் கட்டினதற்காக எனப் பொருள் படுதலால் அது இறந்த காலத்தைக் குறிக்கும்.

விளக்கு வைக்கும் நேரத்தில் சம்பளம் கட்டின ஒருவனை எப்போது சம்பளம் கட்டினாய் என்றால் சம்பளங் கட்டவிளக்குவைத்ததுஎன்றால்அப்போது கட்ட என்பது சம்பளங் கட்டிக்கொண்டிருக்கும் பொழுதுவிளக்கும்வைத்துக் கொண்டிருந்தது எனப் பொருள்படுதலால்; அது நிகழ்காலத்தைக் குறிக்கும். ஆதலால் கட்ட என்பது மூன்று காலத்துக்கும் பொதுவாய் வருதலால் முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சம் எனப் பெயர்பெற்றது.

## முற்று.

முற்று:—ஆன் முதலாகிய ஆண்பால் விகுதிகளைப் பெற்று வருவது ஆண்பால் முற்று. ஆள் முதலாகிய பெண்பால் விகுதிகளைப் பெற்று வருவது பெண்பால் முற்று. ஆர் முதலாகிய பலர்பால் விகுதிகளைப் பெற்று வருவது பலர்பால் முற்று. து. முதலாகிய ஒன்றன்பால் விகுதிகளைப் பெற்று வருவது ஒன்றன்பால் முற்று. அ;முதலாகிய பலவின்பால் விகுதிகளைப் பெற்றுவருவது பலவின்பால் முற்று. என், முதலாகிய தன்மை, ஒருமை விகுதிகளைப் பெற்று வருவது தன்மை ஒருமை வினைமுற்று.

ஓம் முதலாகிய தன்மைப் பன்மை விகுதிகளைப் பெற்று வருவது தன்மைப் பன்மை வினைமுற்று. ஆய், முதலாகிய முன்னிலை ஒருமை விகுதிகளைப் பெற்று வருவது முன்னிலை ஒருமை வினைமுற்று. ஈர், முதலாகிய முன்னிலைப் பன்மை விகுதிகளைப் பெற்றுவருவது முன்னிலைப் பன்மை வினை முற்று. இந்த ஒன்பது முற்றும், குறிப்புவினை உடன்பாட்டில் ஒன்பதும், குறிப்புவினை எதிர்மறையில் ஒன்பதும் தெரிநிலைவினை உடன்பாட்டில் ஒன்பதும், தெரிநிலை வினை எதிர்மறையில் ஒன்பதுமாக முப்பத்தாறு வகைப்பட்டு, அம் முப்பத்தாறில் தெரிநிலைவினை உடன்பாட்டிலுள்ள ஒன்பதுமாத்திரம் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என ஒவ்வொன்றும் மும் மூன்றுவகைப்பட்டு இருபத்தேழாகி மொத்தம் ஐம் பத்து நான்கு வகைப்படும். இந்த முற்றுகளெல்லாம் முன்னே ஒரு பெயர்ச்சொல் வந்தாலும் பொருந்த வரும். பின்னே ஒரு பெயர்ச்சொல் வந்தாலும் பொருந்த வரும்.

## உதாரணம்.

பையன் வந்தான்,
வந்தான் பையன்,
இவன் சிதம்பரத்தான்
சிதம்பரத்தான் இவன்

---

இவ்வகையேயன்றி வேறுவகை வினைச் சொற்கள்.

1. a. செய்வினை:—முன்னே சொல்லியிருக்கிற எல்லாவகையான தெரிநிலை வினைச்சொற்களும், படு, உண் என்கிற இரண்டையும் பெறாமல் வருவதாம்.
(உ-ம்) சுட்டான்

1. b. செயப்பாட்டுவினை:—முன்னே சொல்லிய எல்லா வகையான தெரிநிலை வினைச்சொற்களும், படு, உண் என்கிற இரண்டில் ஏதாவதொன்றைப் பெற்று வரும் சொற்களாம். (உ-ம்) சுடப்பட்டான், கட்டுண்டான்.

2. a. செயப்படுபொருள் குன்றாத வினை:—ஒரு வாக்கியத்தில் எழுவாயோடும், செயப்படு பொருளோடும்கூடி வரும் பயனிலையாகிய வினைச்சொல்லாம்.
(உ-ம்) சிங்கம் யானையைக் கொன்றது என்பதில் கொன்றது என்பது.

2. b. செயப்படுபொருள் குன்றியவினை:-ஒருவாக்கியத்தில் எழுவாயோடு கூடியும், செயப்படு பொருள் பெறாமலும்வருகிற பயனிலையாகிய வினைச்சொல்லாம். (உ-ம்) யானைவந்தது இதில் வந்தது என்பது.

3. a. தன்வினை:— வி. பி. து. சு. முதலியவைகளில்ஒன்றும் பெறாமல், நட, வா, போ என்பனபோலவரும் வினைச்சொல்,

3. b. பிறவினை:—வி. பி. து. சு. முதலியவைகளில் ஏதாவதொன்றைப்பெற்று வரும்வினைச்சொல்.
(உ-ம்) செய்வி, நடப்பி, நடத்து, பாய்ச்சு,

4. **ஏவல்வினை:-** ஒருவனையாவது பலபேரையாவது ஏவவரும் தெரிநிலைவினைச்சொல். ஒருவனைஏவும்போது நடப்பாய், வருவாய், கேட்பாய் என்பதுபோலவே ஏவவேண்டும். ஆய் விகுதியை நீக்கி, நட, வா, கேள், என்று ஏவினும், ஆய்விகுதியிருப்பதாகக் கொள்ளவேண்டும். நடவும், நடவுங்கள் என்பன, போன்றவை பன்மை ஏவல்.

5. **வியங்கோள்வினை:-** தெரிநிலைவினைச் சொல்லாகிய நட, வா, முதலிய பகுதிகளில் க. அ. என்கிற விகுதிகளில் ஏதாவதொன்றைச் சேர்த்து, நடக்க, வாழ, என மரியாதையாய் ஏவும் ஏவலாம்.

6. **இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்குப் பொதுவான குறிப்புவினை.** வேறு, இல்லை, உண்டு.

7. **இருதிணை ஐம்பான் மூவிடங்களுக்குப் பொதுவான தெரிநிலைவினை,** வியங்கோள்வினை. (உ-ம்) வாழ்க.

8. **முற்றெச்ச வினை;-** முற்று, எச்சப்பொருளைத் தந்தால் முற்றெச்சம். (உ-ம்) சாத்தன் எடுத்தான் கொடுத்தான் என்பதை, சாத்தன் எடுத்துக் கொடுத்தான், என்றால் எடுத்தான் என்கிற முற்று, எடுத்து என்று எச்சமாய் வருவதால் முற்றெச்சம்.

9. யார், என்பது, வினைப்பொருளைத் தருகிற குறிப்புவினை முற்று, பலர்பால் முற்றன்று. ர், பொது

விகுதி. உயர்திணைப்பெயராயின் யாவர் எனவந்து யாரென விகாரப்படும்.

எவன் என்பது, வினாப்பொருளைத்தருகிற குறிப்பு வினை முற்று. ஆண்பால் முற்றன்று. எது, என்றும், எவையென்றும், பொருள்படும். இன்னும் அந்த எவன்? என்பது, ஏன்? என்றும், என்னை? என்றும், என்ன? என்றும், என்னே? என்றும், என்? என்றும் பலவகையாய் விகாரப்பட்டு வரும். அன் பொது விகுதி.

ஏவலுக்கும் வியங்கோளுக்கும் வித்தியாசம்:— ஏவல் கட்டளைப் பொருளில் மாத்திரம் வரும். முன்னிலையில் மாத்திரம்வரும். ஒருமை, பன்மையுண்டு.

வியங்கோள்வினை.- ஏவலில் வராது, வாழ்த்தல் வைதல், விதித்தல், வேண்டல், என்கிற நான்கு பொருளில் வரும். ஐம்பால் மூவிடங்களிலும் வரும். ஒருமை பன்மை பகுப்பில்லை.

(உ-ம்) வாழ்த்தல் வியங்கோள் வாழ்க.
வைதல் வியங்கோள் சாக.
விதித்தல் வியங்கோள் உண்க.
வேண்டல் வியங்கோள் அருளுக.

சுபம்.

| தமிழ்ப்பெயர் வினை. | ஆங்கிலப்பெயர். Verb. |
|---|---|
| 1 a செய் வினை | Active Verb. |
| b செயப்பாட்டு வினை. | Passive Verb. |
| 2 a செயப்படு பொருள் குன்றியவினை | Transitive Verb. |
| b செயப்படு பொருள் குன்றாத வினை. | Intransitive Verb. |
| 3 a தெரிநிலைவினை. | Definite Verb. |
| b குறிப்பு வினை. | Indefinite Verb or Symbolic Verb. |
| 4 a உடன்பாடு | Affirmative |
| b எதிர் மறை | Negative. |
| 5 a முற்றுவினை | Finite Verb. |
| b எச்சவினை | Participles and Infinitive |
| 6 பெயரெச்சம் | Adjective Participle |
| 7 வினையெச்சம் | Adverbial Participle |
| 8 முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சம் | Infinitive Mood. |
| 9 ஏவல்வினை | Imperative Verb. |
| 10 வியங்கோள் | Optative Verb. |
| 11 தொழிற்பெயர் வினையாலணையும் பெயர் | Verbal Nown. |
| 12 பிறவினை. | Caustive Verb- |